**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

**CC. No: 18/2024** Date: 09.06.2026

**Prosecution Witness**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | **PW : 4** |
| Name | : | தேவராஜன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Age | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 09.06.2026.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது சேலம் இருப்புப்பாதை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.08.2023 ம் தேதி நான் தருமபுரி இருப்பப்பாதை காவல் நிலையத்தில் நடைமேடை SO அலுவலலில் இருந்தபோது இரவு 9.30 மணிக்கு மேல் அப்போது உதவி ஆய்வாளராக இருந்த தங்கராசு என்பவர் இரயில் வண்டி எண். 16232 மைசூர் – மயிலாடுதுறை விரைவு வண்டியில் ஒசூர் ரயில் நிலையத்திலிருந்து ரோந்து அலுவலக வந்த காவலர் மின்னல்ராஜ் என்பவர் S3 coach ல் பயணிகளுக்கு பாதுகாப்பாக மற்றும் களவு ஏற்படாமல் இருக்க விழிப்புணர்வு செய்ததாகவும், அப்போது கர்நாடகா மாநிலம், அரிசிபாளையத்தில் ரயில்வே ஊழியராக பணிபுரியும் ஆல்பர்ட் அனில்குமார் என்பவர் தனது குடும்பத்துடன் வந்தவர் குடிபோதையில் இங்கு கோச்சில் எதுவும் சொல்லத்தேவையில்லை எங்களுக்கு தெரியும் என்று கூறினார்.

2. பதிலுக்கு காவலர் பதில் கூறும்போது ஏற்பட்ட வாய்தராறில் தகாத வார்த்தையால் பேசியதாக எனக்கு நான் தருமபுரி ரயில் நிலையத்தில் நடைமேடையில் பணியிலிருந்தபோது மின்னல்ராஜ் சொன்னதன்பேரில் உதவி ஆய்வாளர் திரு. தங்கராஜ் மேற்படி தகவலை என்னிடம் சொன்னார். மேற்படி வண்டி எண். 16232 தருமபுரி ரயில் நிலையத்திற்கு வந்தபோது நானும், உதவி ஆய்வாளர் தங்கராசுவும் S3 coach க்கு சென்று தகராறில் ஈடுபட்ட எதிரியை வண்டியிலிருந்து கீழே இறக்கி உதவி ஆய்வாளர் உத்தரவின் படி எதிரியை தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று குடிபோதையில் உள்ளாரா என்பது குறித்து பரிசோதனை செய்ய என்னுடன் அனுப்பிவைத்தார். அவரது உத்தரவின்பேரில் எதிரியை மருத்துவமனைக்கு அழைத்து சென்று அவர் குடிபோதையில் இருப்பதை உறுதிசெய்து அதற்கான சான்றிதழ்

பெற்றேன். என்னிடம் காண்பிக்கப்படும் சான்றிதழ் தான் நான் எதிரியை மருத்துவமனை அழைத்து சென்று பெற்றது ஆகும். **எதிரி மதுபோதையில் இருந்ததற்கான சான்றிதழ் அ.சா.ஆ.2 ஆகும்.** உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. எனக்கு அன்றைய தினம் இரவு 9.00 மணியிலிருந்து மறுநாள் காலை 7.00 மணி வரை தருமபுரி ரயில் நிலைய நடைப்பாதையில் பணி இருந்தது. நான் சம்பவத்தின்போது பணியிலிருந்ததற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், Beat book பராமரிக்கப்பட்டு வருகிறது. மின்னல்ராஜா என்ற காவலருக்கும், எதிரிக்கும் இடையே நடந்த சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எதிரியை மருத்துவ பரிசோதனைக்காக அழைத்து சென்றதாக பட்சத்தில் கடவு சீட்டு கொடுப்பார்கள் என்றால் சரிதான். கடவுசீட்டில் நான் எத்தனை மணிக்கு அந்த அலுவலல் சம்பந்தமாக சென்றேன் என்றும், எப்போது முடித்து அதை ஒப்படைத்தேன் என்ற விபரம் இருக்கும் என்றால் சரிதான்.

2. அன்றைய தினம் உதவி ஆய்வாளர் எதிரியை அழைத்து செல்ல என்னிடம் கடவுசீட்டு எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான், மெமோ வழங்கினார். மருத்துவர் எதிரியிடமிருந்து ரத்த மாதிரி எடுத்து சான்றிதழ் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட நபர் காவலர் என்பதால் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க எதிரிக்கு எதிராக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி ரயில்வேயில் பணிபுரிந்ததால் எதிரிக்கும், மின்னல்ராஜாவுக்கும் ஏற்கனவே உள்ள கருத்து வேறுபாட்டை மனதில் வைத்து பழிவாங்கவேண்டும் என்று கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

TAMIL ARASU A

Digitally signed by TAMIL ARASU A
Date: 2026.06.09 15:00:38 +0530